

# பரலோக பொக்கிஷங்கள்

மேலானவைகளையே நாடுங்கள்! (கொலோசெயர் 3:2)

## அவரது மரணம் கற்றுத்தந்த நறுமண வாழ்க்கை!

ஆண்டவர் இயேசு ''ஒருவன் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை அனுதினமும் எடுத்து'' அவரைப் பின்பற்ற அழைத்த அழைப்பை, அப்படியே ஏற்று நடப்பவர்கள் பாக்கியவான்கள்! (லூக்கா 9:23). ஏனெனில், நம் ஒவ்வொருவரிடத்திலும் ''வெறுக்க உகந்த 'தன்னைத்தான்' என்ற சுயம்'' உள்ளது! அந்த சுயத்தை புறக்கணித்து வாழ்வதே ஒப்பற்ற சிலுவையின் ஜீவியம்! உதாரணமாய் 'கோபம்' என்ற சுயம், நமக்குள் வரும் போது, அந்த வீட்டில் நறுமணம் வீசுமோ? அது நாற்றமல்லவா! அது சிலுவையில் புறக்கணிக்கப்படுவதே நலம்! மெய்யாகவே 'கோபம், ஆத்திரம், குற்றஞ்சாட்டுதல்' ஆகிய 'தான்' (Self) வெளிப்படும் போது, 'நாற்றமே' வீசுகிறது! அவர் மாத்திரம் 'சிலுவை மரணத்தை' எனக்கு கற்றுக்கொடுக்காவிட்டால், நாள்தோறும் என்னிலும், நான் போகுமிடமெங்கும் நாற்றமே வீசிடும்! 'குரு கற்றுத்தந்த சிலுவையில் 'நான்' மரிப்பதால், நாற்றம் போய்விடும் என்பது மாத்திரமல்ல..... அங்கு 'நளதத்தின் நறுமணம் வீசுமென்றும், அதுவே நற்கந்தமான சுவிசேஷ நற்செய்தி' எனவும் இயேசு அறிவித்தார்! (மாற்கு 14:8,9).

-tr

பெட்டகம் 40 | மார்ச் 2024 | பரல்கள் 3



## குழியிலிருந்து தூக்கப்பட்டு, நரகம் செல்வதா?

நமது உள்ளம் நடுங்கும் விதமாய், இயேசு உரைத்த வார்த்தைகளைக் கவனியுங்கள்.... "ஒருவனை உங்கள் மார்க்கத்தானாகும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிகிறீர்கள்! பின்பு.... அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள்!!" (மத்.23:15). இயேசுவின் இந்த வார்த்தைகள் என்னில் நிரந்தரமான "தெய்வ பயத்தை" தந்துள்ளது!!

இன்றைய சபைகளின் சுவிசேஷ பிரகடன தரம், இயேசு சுட்டிக் காண்பித்த எல்லையிலிருந்து வெகுவாய் சீரழிந்து தாழ்ந்துபோய் கிடக்கிறது! சபைகள் போகிற போங்கினைப் பாருங்கள்.... "உலகமும் அதன் மாசுகளும் அன்றாட நடைமுறை வாழ்விற்கு தேவையே!" எனக்கூறும் கதியில் சரிவடைந்துள்ளது! நம் சுவிசேஷ பாங்கு "சமூக சமரசம்" என தேய்ந்து "ஆவிக்குரிய" ஒப்பற்ற நிலையை இழந்து காணப்படுகிறதே! தனி நபர் தொடங்கி, சபை மட்டும் ஆராதனையின் புனிதம், அவர்களின் இஷ்டத்திற்கு பிய்த்து - நார்நாராகிப் போய் விட்டது! ஒவ்வொரு கிறிஸ்தவனும், கிறிஸ்தவ சபைகளும் மனந்திரும்ப வேண்டிய அவசர காலமிது!

*-Ed*


**2024 'பரலோக பொக்கிஷங்கள்' சந்தா புதுப்பிக்கவும்**

வருட சந்தா **ரூ.170/-** தயவுசெய்து உடன் **M.O** செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு மார்ச் 20-ம் தேதிக்குள் அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.140/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.950/- அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் 'புதிது' என்று குறிப்பிடவும். நன்றி!

ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
(பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலமும் அனுப்பலாம்)
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 98430 49935 Ph (O) 0452 - 3585200
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : paralogapokkishangal

## உங்கள் கடின பாதையை 'கர்த்தர்' அறிந்திருக்கிறார்!

*தேவனை மறுத்து 'விதியை நம்புவது' தவறு*

ஓர் விசுவாசியின் நிச்சயமான நம்பிக்கையே "நான் போகும் வழியை அவர் அறிவார்!" என யோபு 23:10-ம் வசனத்தில் கூறிய நல் அறிக்கை! இப்போது நீங்கள் கடந்து வரும் பாதை திகைப்பாயும், கோணலாயும் இருந்தாலென்ன? பாடுகளும் கண்ணீருமாய் இருந்தாலென்ன? "நீங்கள் நடந்து வரும் இந்தப் பாதையையும் அவர் அறிவார்!" அக்கினிச் சூளையின் எரி வெப்பம் ஏழு மடங்காகிவிட்டதோ, அந்த கொதி வெப்பத்தைக் கூட்டி எரியச் செய்ததும், **நம் கர்த்தரேதான்!** உங்கள் பாத அடிகளை நன்கு அறிந்து நடத்துபவர், சர்வ வல்ல நம் தேவனல்லலவா? அவர், கசப்பான மாராவின் தண்ணீரண்டை நடத்தினாலென்ன? அல்லது 'ஏலீம்' போன்ற பசுமையான மகிழ்ச்சிக்கு நடத்தினாலென்ன? 'அங்கங்கே எல்லா இடங்களிலும்' கர்த்தரல்லவோ நடத்தி வந்தார்!

> "**எகிப்தியருக்கு இருளாயிருந்த 'அதே பாதை' அவரது இஸ்ரவேல் ஜனங்களுக்கு மேக ஸ்தம்பமாயும் அக்கினி ஸ்தம்பமாயும் நின்றல்லவோ, அவர்களை நடத்தியது! 'அக்கினி சூளை' அதிக வெப்பமாயிருந்தாலும், 'அதை சூடேற்றிய கரம்' நாம் நம்பியிருக்கும் அவரது கரமல்லவா?**

மேலும், அவர் ஏற்றி வைத்த அக்கினி, நம்மை பட்சிப்பதற்கு அல்ல, நம்மை சுத்திகரித்திடவே வைத்திருக்கிறார் எனவும் நிச்சயத்திருக்கிறோம்! அவர் விரும்பிய சுத்திகரிப்பு முடிந்தவுடன், அவரது ஜனமாகிய நம்மை "**புடமிட்ட பொன்னாய்**" வெளியே கொண்டு வருவார் என்பதையும் நாம் அறிந்திருக்கிறோமல்லவா?

சூளையின் தகிப்பான நேரத்தில் 'கர்த்தர் நம் அருகில் இருக்கிறாரோ?' என நாம் தியங்கும் போது, அவரோ நம் 'வெகு அருகாமையில்தான்' இருந்து கொண்டிருக்கிறார்! "என் ஆவி என்னில் தியங்கும்போது நீர் என் பாதையை அறிந்திருக்கிறீர்" என தாவீதரசனும் உரைத்திருக்கிறாரே! (சங்.142:3). ஆம், ஏறிட்டுப்

பாருங்கள்! சூரிய கதிரின் வெளிச்சத்தைவிட, அதிக பிரகாசமான ஒளி, உங்கள் இருப்பிட அறையின் ஊடாய் பிரகாசித்து, காலையில் நீங்கள் எழும் நேரத்தில், **உங்களைப் பார்த்திடும் கதிரொளியே** நம் பரவசம்! பாசமும் மனதுருக்கமும் கொண்ட அவரது கண், இன்றைய நாள்முழுவதும் நாம் செல்ல வேண்டிய **பாதையை காண்கிறாரே,** அது நம் பாக்கியமல்லவோ? மேலும், அந்த பாதை முழுவதையும் அவர் அறிந்திருப்பதும், நமக்கு கிடைத்த சிலாக்கியம் அல்லவோ?

இவ்வளவு பெரிய சிலாக்கியதை உங்களால் அறிய முடியவில்லையா? அப்படியானால், உங்கள் கண்களை ஏறிட்டு இன்றைய உலகத்தைப் பாருங்கள்! இந்த உலகம், தனக்கு ஏற்பட்ட துயரங்கள் அனைத்தையும், நம்பிக்கை இழந்த சொல்லாய் "விதி" என்றல்லவா புலம்புகிறது! எல்லாம் அந்த 'விதியின் செயல்' 'விதியின் கொடுமை' என்ற அழிவுக்குரிய, நம்பிக்கையற்ற வார்த்தைகளை ஜனங்கள் கூறுவது துயரமல்லவா? "சர்வ வல்ல தேவன் தரும் பாதுகாப்பு" என்ற மேன்மையான "PROVIDENCE" என்ற வார்த்தையை, தீமையான "விதி" என கூறுவது எத்தனை தீங்கானது!

> "**இன்று பெரும்பாலான மானிடர்கள் "சர்வ வல்ல உயிருள்ள தேவனின் ஆளுகை நடத்துதலை" விசுவாசிக்காமல் தள்ளிவிட்டு, உயிரற்ற "விதியின் பயனை" நம்பியிருப்பது, இந்த உலகத்திற்குரிய சாபமும், மாயையுமாய் இருக்கிறது!**

*யோபு தனக்கு ஏற்பட்ட கொடிய உபத்திரவங்களின் மத்தியில், இந்த உலகத்திலுள்ள எல்லா நம்பிக்கையும் தூள் தூளாகிப் போனாலும், அந்த உபத்திரவ சூழ்நிலைகளை, யாரோ செய்ததாக எண்ணாமல் 'தெய்வ கரத்தை மாத்திரமே கண்டு' மலைத்து நின்றது எவ்வளவு அருமையான காட்சியாய் இருக்கின்றது. தன் மந்தையின் மீது சபேயர்களின் பட்டயம் சீரழிவை ஏற்படுத்தியதற்குப் பின்னால் 'கர்த்தருடைய கரத்தையே' யோபு கண்டார்! வீட்டை தகர்ந்து போகச் செய்த 'இடிக்குப்' பின்னால் கர்த்தருடைய கரத்தையே யோபு கண்டார்! பேரழிவை ஏற்படுத்திய புயலுக்குப் பின்னால் கர்த்தரின் கரத்தையே கண்டார்! சகலமும் அழிந்து போன தன் வீட்டு நிலைமையின் 'மயான அமைதியிலும்' கர்த்தரின் கரத்தையே கண்டார்! நம் உள்ளத்தை வெகுவாய் தொட்ட "கர்த்தர் கொடுத்தார்! கர்த்தர் எடுத்தார்! கர்த்தருடைய நாமத்திற்கே ஸ்தோத்திரம் உண்டாவதாக!" என்ற அவரது வாய்மொழி நம்மை இன்னமும் பரவசம் அடையச் செய்கிறது (யோபு 1:21).*

இவ்வாறாக, சம்பவித்த ஒவ்வொரு சூழ்நிலையிலும் 'தேவனை காண்பதே' விசுவாசம்! ஓர் அரசனை போல் வாழ்ந்த இவர், தூசியிலும் சாம்பலிலும் அமர்ந்து "அவர் என்னைக் கொன்றாலும், அவரை நம்புவேன்" எனக் கூறிய உன்னத விசுவாசத்தைப் பின்பற்றி, நாமும் வாழ்ந்திட தேவன் அருள்புரிவாராக!

*- Mrs.சார்லஸ் கஃவ்மென்*

---

## சிங்காசனத்தில் 'பெருமை' தள்ளப்பட்டு 'தாழ்மை' அமர்வதாக!

*'கிருபையே' இயேசுவுக்கு வெற்றியின் இரகசியம்*

தேவன் காயப்படுத்துகிறார்! காயம் கட்டுகிறார்!..... அது போலவே, தேவன் உயர்த்துகிறார்! தாழ்த்துகிறார்! இந்த உண்மையை எத்தனை தெளிவாய் தேவன் தன் புத்தகத்தில் எழுதி வைத்துள்ளார். அவர் நம்மீது கொண்டிருக்கும் விருப்பமெல்லாம், நம்மை இரட்சிப்பதே யாகும். ஏதோ, நம்மீது பாசமாயிருப்பதுபோல் உணர்ந்தபடியால், திடீரென்று "கிருபையை" அள்ளி வழங்கிட மாட்டார். அவ்வா றெல்லாம் நாம் எண்ணிக்கொள்வது சுத்த மதியீனமேயாகும்.

இவ்வுலகில் மனிதர்கள் எதை எதையோ கண்டுபிடித்திட வாஞ்சிக்கிறான்! எத்தனையோ சிந்தைகளைத் தனக்குள் சிந்திக்கிறான்! இன்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், "தேவன் தன் பிரமாணங் களின்படியே தன் இரட்சிப்பை செயல்படுத்துகிறார்" என்ற இந்த சிந்தையை **ஓர் மாபெரும் கண்டுபிடிப்பாக** இறுகப் பற்றிக் கொள்ளுங்கள். அவ்வாறு பற்றிக் கொண்டால், நீங்கள் ஒருபோதும் வழிதவறிச் சென்றிடவே மாட்டீர்கள்.

> "**எவ்வளவு அதிகம் உங்களைத் தாழ்த்துகிறீர்களோ அவ்வளவாய் அதிக இரட்சிப்பை, அதாவது... அதிக வெளிச்சத்தை... அதிக வல்லமையை.... இவ்வாறு, தேவனுடைய 'எல்லா' அதிகத்தையும் பெற்றுவிடுவீர்கள்!**

தேவனை "அதிகம் வேண்டும்" என வாஞ்சிக்கும் அனைவரும் இப்பொன்னான பிரமாணங்களைத் தழுவிக்கொள்வார்களாக!!

"பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்" என யாக்கோபு 4:7-ம் வசனம் விருதாவாகவா கூறுகிறது? பிசாசை நான் 'எதற்காக' எதிர்த்து நிற்க வேண்டும்? உங்களுக்கு இப்போது 'விடை' தெரிந்துவிட்டது என்றே கருதுகிறேன். ஏனென்றால், அவன்தான் நம்முடைய காதுகளில் 'கிசுகிசுத்து' நம்மைக் குறித்த மேட்டிமையான எண்ணங்கொள்வதற்குத் தூண்டுகிறான்! "ஆகவேதான்" நாம் அவனை எதிர்த்து நிற்க வேண்டும்.

நீங்கள் ஏற்கனவே அவனை உங்கள் வாழ்வில் 'மேட்டிமையின்' தலைவனாக ஏற்றுக்கொண்டிருந்தால், இன்று அவனை, உங்கள் சிங்காசனத்திலிருந்து தூக்கி எறியுங்கள்! பிசாசின் குரலுக்கு செவிகொடுத்து, 'பெருமை' என்னும் கொள்ளை நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் இவ்வுலகில் ஏராளம், ஏராளம்!! சாத்தானின் பிரதான ஆயுதமே "ஒருவனைப் பெருமையினால் உப்ப வைப்பது தான்!" நீங்கள் என்னத்தை மறந்தாலும், இதை நீங்கள் மறவாதிருக்க ஜாக்கிரதை கொண்டிருங்கள்!

> "நீதியை மெச்சிக்கொள்ளாத கிறிஸ்தவர்கள் யாருமே இல்லை எனலாம். ஆம், தேவன் அப்பழுக்கற்ற நீதியுள்ளவர். அவர் செய்வது அத்தனையும் சரியாகத்தான் இருக்கும்! அவர் பிழையற்றவர்! பிறர் உங்களைச் சரியாக நடத்தாமல், உங்களுக்குரிய பொதுவான அளவின்படியான மரியாதையை கூட காட்டாமல் இருந்தால், அதினால் என்ன? அவை யாவும் தேவனை சிறிதளவும் பாதிப்பதேயில்லை! அவர் தொடர்ச்சியாக உங்களுக்குத் தரவேண்டிய கிருபையை கொடுத்துக் கொண்டே இருப்பார்!**

"இந்த உண்மை" நம்மில் சதா - நிறைந்த மகிழ்வைத் தருகின்றதல்லவா? வாழ்வின் எல்லாவற்றிற்கும் உரிய திறவுகோலை **தாழ்மையென்னும் விதி வழங்கும் கிருபையை** பெற்றிருப்பது எவ்வளவு மகிமையானது என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள்.

நாம் யாவரும் ஓர் ஓட்டப்பந்தயத்தில் பங்குபெற்று ஓட வேண்டும் என வேதம் கூறுகிறது. நாமோ தாழ்மையென்னும் இந்த பந்தய சாலையில் கருத்தாய் ஓடிடக்கடவோம்! தாழ்மையுள்ளவர்களிடமே ஞானமும், கிருபையும் தங்கியிருக்கிறது! இதற்கு மாறாக, நம்மைக் குறித்து எந்த ரூபத்தில் மேட்டிமையான எண்ணங்களைக் கொண்டிருந்தாலும், அது மதியீனத்தின் உச்ச கட்டமும்... பைத்தியம் கொண்டது போலவும் ஆகும்!! ஆம், பெருமை கொண்டவனின் செயல் 'பைத்திய' செயலாகவே தோன்றும்! காரியம் இவ்வாறாய் இருக்க, நீங்கள் எத்தகைய வாழ்க்கையைத் தெரிந்துகொள்ளப் போகிறீர்கள்? தீர்மானம் உங்கள் கரத்தில் இருக்கிறது... தாழ்மைக்கு கைகொடுக்கும் உங்கள் தீர்மானமே "கிருபை பெற்றிடும் ஜீவ பிரமாணம்". ஆகவே பெருமையின் பிரமாணத்திற்கு சற்றும் கைகொடாமல், தாழ்மை பிரமாணத்தை மனதார போற்றி 'தெய்வ கிருபையை' சொந்தமாக்கி வாழுங்கள்!

- எலியாஸ் அஸ்லாக்சன்

## ‘உயிர்ப்பிக்கும் வல்லமையோடு’ ஜெயித்து வாழும் சபை!

*‘தேவ பிரசன்ன சபையில்’ மாத்திரமே தங்கியிருங்கள்*

உத்தம விசுவாசம் கொண்ட சபைகள் “வேத வாக்கியங்களுக்கு அப்படியே கீழ்படிவதால்” **ஆதி கிறிஸ்தவ மக்கள்** என்றே பெயர் சூட்டப்படுகிறார்கள்! இருக்கட்டும், அது நல்லதுதான்! ஆனால், நாம் அந்த ஆதிநிலையில் மாத்திரமே திருப்தி அடைந்திடக் கூடாது. நம் ஆண்டவராகிய இயேசுவை முழு மனதாய் அன்புகூர்ந்து பின்பற்றும் சபையோராகிய நாம் “கிறிஸ்துவின் இரண்டாம் வருகை நெருங்கி வந்துவிட்ட” இந்த காலத்தில், ஏராளமான உலகத்தின் ஆவியையும், குளறுபடிகளையும் எதிர்நோக்கியுள்ளோம்! எனவேதான், இப்போது ஆதி நிலை அல்ல.... அதைவிட மேலான உயிர்ப்பிக்கும் வல்லமையும், ஒழுக்கத்தின் பண்பும், இருதய பரிசுத்தமும், உலகத்தை விட்டு வேறு பிரிந்த பரிசுத்த ஜீவியமும் நம் மீது பொழியப்படவே, கர்த்தருடைய ஆவியின் நிறைவை வாஞ்சிப்போமாக!

> “ **நான் கூறும் தீர்க்கதரிசன வார்த்தைகளை ஏற்றுக் கொள்ள மனதாயிருந்தால், அதை கேட்பீர்களாக: “நாம் எதிர்நீச்சல் போட்டு கிறிஸ்தவ விசுவாசத்தையும், கிறிஸ்துவின் போதனையையும், கிறிஸ்துவின் ஜீவியத்தையும் வாழ்ந்துவிட முன்னேறவில்லையென்றால்! தேவனுடைய முகத்தை தேடி, அவருடைய பரிபூரண சித்தம் செய்திட துணிவு கொள்ளவில்லையென்றால்! நன்றாய் கேளுங்கள், தேவன் நம்மை விட்டு கடந்து சென்று விடுவார்!”**

கர்த்தருடைய ஆவி நம்மைவிட்டு கடந்து சென்றுவிட்டால், “வெறும் கூடாய் இருக்கும் முட்டைகளை” வியாபாரத்திற்கு தூக்கி சென்றவர்களைப்போல் ஆகிவிடுவோம்! செத்தவனை புதைக்கும் நிலைக்குத் தள்ளப்படுவோம்! அன்று, இஸ்ரவேலின் தலைவர்கள் இயேசுவைப் பார்த்து, “நாங்கள் ஒன்றும் வேசியின் பிள்ளைகள் அல்ல! ஆபிரகாமின் பிள்ளைகள்! நாங்கள் இருக்கும் இந்த ஆலயம் தேவனுடைய ஆலயம்!” எனக் கூறினார்கள். அதற்கு இயேசுவோ “நீங்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாயிருந்தால், ஆபிரகாமின் கிரியைகளை செய்திருப்பீர்கள்! அதுஇல்லாமல், இது எங்கள் ஆலயம் என்று மேன்மை பாராட்டுகிறீர்களே.... இந்த ஆலயத்தில் ஒரு கல்லின் மேல் ஒரு கல் இராமல் எடுபடும் காலம் வந்துவிட்டது!” என்றே தீர்க்கதரிசனமாய் எச்சரித்தார். இயேசு உரைத்த இந்த தீர்க்கதரிசன வார்த்தைகளை, ரோம பேரரசு கேட்டதில்லை. ஆனால், தேவனுடைய வாக்கு நிறைவேறும்படி, ரோம பேரரசு படையெடுத்து, தங்களுடைய

பரிசுத்த ஆலயம் என யூதர்கள் மேன்மைபாராட்டிய அந்த ஆலயத்தை, அஸ்திபாரம் வரை ஒரு கல்லின் மேல் ஒரு கல் இராதபடி அந்த பேரரசன் தூக்கி எறிந்தான்! இந்த உலக சரித்திரத்தில்....

“ **தேவனுடைய திவ்ய சித்தத்தை நிறைவேற்றத் தவறிய எந்த ஒரு சபையையும் தேவன் விட்டு வைக்காமல், அவைகளைப் புறக்கணித்து கைவிட்டார் என்றே நாம் காண்கிறோம்!**

பாவ மாந்தர்கள் நிறைந்த உலகில், கிறிஸ்துவின் மறுரூபமடையச் செய்திடும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கத் தவறிய அல்லது தேவ சித்தத்தை நிறைவேற்றத் தவறிய ஊழிய மாந்தர்கள்.... தங்கள் நீண்ட அங்கியை வைத்தோ, பளபளக்கும் தங்க முலாம் சிலுவையை வைத்தோ, அல்லது தங்களின் நீண்ட வேத கலாச்சாலை பட்டங்களை வைத்தோ, தேவனுடைய மனதை கவர்ச்சிக்க இயலாது! என்பதை திட்டமாய் அறிந்து கொள்வார்களாக!!

20 முதல் 40 ஆண்டுகளுக்கு முன்பு யாரை தேவன் எழுப்பினாரோ, அவர்கள் கிருபை மிகுந்த தேவ சித்தத்தில் நிலை கொள்ளாமல், கர்த்தரை உத்தமமான விசுவாசத்திலும், அன்பிலும், தாழ்மையிலும் தொடர்ந்து பின்பற்றவில்லையென்றால்.... தேவன் அவர்களை புறக்கணித்திட தயங்கமாட்டார். நான் இங்கு வேதனையுடன் குறிப்பிடுவது எந்த ஒரு தனி நபரையும் அல்ல! சபை என்ற பெயரில் கூடியிருக்கும் ‘கர்த்தருடையவர்களைப்’ பார்த்தே பேசுகிறேன்!

‘நாம் இப்பொழுது ஒரு பெரிய கூட்டமாய் சேர்ந்து விட்டோம்’ என நீங்கள் கூறிக்கொள்வதெல்லாம், தேவனுக்கு முன்பாக எடுபடாது! அவர் தமது ஆசீர்வாதத்தை திருப்பிக்கொண்டு, எங்கோ இருக்கும் நல்ல இருதயம் கொண்ட ஜனங்களை நாடிச் செல்வார்! யார் இவர்கள்? தேவனை தீராத அன்பினால் நேசிப்பதையும், அவருடைய கற்பனைகளுக்கு கீழ்படிவதையும் மிகப் பெரிய சொத்தாய் கண்டடைந்தவர்கள்!!

“ **விசுவாசிகளாயிருக்கும் தன்னுடைய பிள்ளைகளை தேவன் ஒருபோதும் புறக்கணிக்கமாட்டார் என நான் அறிந்திருக்கிறேன்! ஆகிலும், தன்னையும் தன் நித்திய வார்த்தைகளையும் புறக்கணிக்கும் சபைகளை விட்டு, தேவன் நிச்சயமாய் தன்னுடைய பிரசன்னமாகிய மேக ஸ்தம்பத்தையும், அக்கினி ஸ்தம்பத்தையும் விலக்கிக் கொள்வார் என, நான் திட்டமாய் அறிந்திருக்கிறதைப் போலவே, நீங்களும் அறிந்து கொள்வீர்களாக!**

அன்பான சபையோரே, நாம் எதை வேண்டுமானாலும் இழக்கத் துணியலாம். ஆனால் அவரது மேக ஸ்தம்பமும், அக்கினி ஸ்தம்பமு மாகிய அவரது பிரசன்னத்தை எக்காலத்தும் இழந்துவிடக் கூடாது.

> **“ ‘அவரது ஷெகினா மகிமை’ சுடர்ஒளி பரிசுத்த ஆவியின் வல்லமை கொண்டு, சபையில் எப்போதும் எரிந்து கொண்டேயிருக்க வேண்டும்! ‘தேவன் நம்மோடு இருக்கிறார்’ என்ற தொனி மாத்திரமே, நமது ஜெயத்தின் தொனி!**

இந்த சீரான இடத்தைப் பெற்றவர்கள், “எல்லாவற்றையும் இழந்தாலும், நீர் வாசமாயிருக்கும் உத்தம சபையில் தங்கியிருக்கும் பாக்கியத்தை இழந்திட மாட்டோம்!” என்றே அறிக்கை செய்வார்கள். இச்சிக்கப்படத்தக்கவைகளில் “ஒரு உண்மை சபையை” இச்சிப்பதைப் போல் வேறொரு தித்திக்கும் சுவை எங்கும் இல்லை! ஆமென்.

- *A.W.டோசர்*

---

## ‘கிறிஸ்துவுக்குள்ளான இழப்புகள்’ பேரானந்தமாக மாறின!

*சிலுவை வழியே உலகத்தை ஜெயித்திடும் வழி*

விசுவாச சுகத்தை ‘என்னில் கற்பித்த தேவன்’ அவர் அனுப்பிய சில வியாதியஸ்தர்களை பூரண குணமடையச் செய்ததைக் கண்டு கர்த்தரை ஸ்தோத்தரித்தேன்! இச்சமயத்தில், மருத்துவத்தால் அறிய முடியாத சுகவீனம் எனக்கு ஏற்பட்டது. ‘இந்த சுகவீனம்’ தேவன் எனக்குத் தந்த விசேஷித்த வெளிப்பாடுகளின் மகிமையை மூடும் கிரியையாயிருக்கிறது என தேவன் எனக்கு தெளிவுபடுத்தினார்.

> **“ எனக்கு அவ்வப்போது என் வாழ்க்கையில் நடந்த “தேவனைக் குறித்த அதிக அளவான வெளிச்சம்” என் ஆத்துமாவுக்கே எதிரடியாக மாறிவிடக்கூடாது என அறிந்த தேவன், சில துன்பங்களை எனக்கு அனுப்பி, என்னைப் பாதுகாத்துக் கொண்டதை கர்த்தரிடமிருந்து கற்று அனுபவித்திருக்கிறேன்!**

அதுபோலவே என் சரீரத்துக்கு ஏற்பட்ட இந்த நோவும், அதுபோன்றதாகவே இருப்பதை நான் உணர்ந்தேன்!

இக்காலத்தில், பிரான்ஸ் நாட்டு பிஷப் தந்தை லா-மோத்தே எனக்கு விரோதமாக ‘முகாந்திரமின்றி’ சில தீங்குகளை மறைவாக செய்து கொண்டு இருந்தார். அதனிமித்தம், அங்கிருந்த தந்தை லா-கோம்பே அவர்கள் என்னோடு கொண்டிருந்த ஆவிக்குரிய சிநேகத்தை இழந்துவிடுவார்களோ என, மனதில் சஞ்சலம் கொண்டேன்.

*நான் இதற்கு முன்பு தந்தை லா-கோம்பே அவர்களுக்கு எழுதிய கடிதம் கொஞ்சம் மன சஞ்சலத்தை அவருக்கு ஏற்படுத்தியிருந்தது. அதுஏனென்றால் நான் எழுதியதுபோல் இல்லாமல் "தான் கர்த்தரோடு நன்றாயிருப்பதாக அவர் எண்ணியிருந்ததே" காரணமாகும். அவருடைய ஆவிக்குரிய நிலையை சுட்டிக்காட்டி, சில சத்தியங்களை தேவன் என் மூலமாக எழுத வைத்தது உண்மை தான். எப்படியிருந்தாலும், இப்போது அவர் 'லெந்து நாட்கள்' பிரசங்கங்களுக்காக பல இடங்களுக்கு பிரசங்கிக்கச் சென்றிருந்தார்! ஊழியத்திலிருந்த அவருக்கு, சரீர சுகவீனம் ஏற்பட்டதாக சிலர் எனக்கு தகவல் தெரிவித்தார்கள். நானும் மனப்பூர்வமாய் 'அவருடைய சுகத்திற்காய்' ஜெபம் செய்து, ஜெபத்தைக் கேட்ட ஆண்டவர், அவருக்கு பூரண சுகம் தந்தார். அவரும், முன்புபோலவே முன்னேறிச் சென்று ஊழியம் செய்தார்!*

*நான் கடந்து வந்த ஓர் நீண்ட கண்ணீர் பள்ளத்தாக்கின் வாழ்க்கையில்,* **தேவ அன்பும் என் கர்த்தராகிய ஆண்டவருமே** *என் முழு வாழ்க்கையின் பின்னணியாய் இருந்தது! என் முழுமையையும் தேவனுக்குள் இழந்தேன். அதாவது, 'என்னையே என்னால் காண முடியாத அளவிற்கு'* **என் முழுமையும் அவருக்குள்ளானேன்!** *திவ்விய சமுத்திரத்தில் என் இருதயம் ஆழமாய் சென்றுவிட்டபடியால், அந்த சமுத்திரத்திலிருந்து என் இருதயத்தை வெளியே கொண்டு வருவது அரிது என உணர்ந்தேன். ஒரு உண்மையை நான் சொல்லுவேன்: அவருடைய சமுத்திரத்தின் ஆழத்திற்குள் என்னை நடத்தியதெல்லாம் துன்பங்களும், பாடுகளும், நிந்தையும், பரிகாசமுமான சிறுமையின் நிலைமையேயாகும்!*

> **"சகலமும் சிலுவையின் பாதையிலும், அவருடைய மரணத்தின் பாதையிலும் நடந்துவிட்ட செயலாயிருந்தாலும், நான் பெற்ற மகிழ்ச்சியோ அளவிட முடியாததும், என் இழப்புகள் அனைத்தும் "பேரானந்த இழப்பாயும்" இருந்தது!**

*மொத்தத்தில் நான் சொல்வேனென்றால், "நான் இப்போது வாழவில்லை! இயேசு மாத்திரமே எனக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்!" நான் பிரவேசித்த ஸ்தலம் "நரிகளுக்குக் குழிகளும், ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு! ஆனால் மனுஷ குமாரனுக்கோ (எனக்கோ) தலை சாய்க்க இடமில்லை" என அழைத்த வேத வாக்கியமே எனக்கு சொந்தமாகிவிட்டது (மத்.8:20). இந்த வசனம் என் ஜீவியத்தின் ஆழமான அனுபவமாயும் மாறிவிட்டது:*

*நான் இங்குதான் வசிப்பேன் என என்னால் கூறமுடியாது! இதுவே என் அடைக்கலம் எனவும் என்னால் கூறமுடியாது! என் நண்பர்களும் நிலைத்திருப்பார்கள், எனவும் என்னால் கூற இயலாது! சூழ நிற்கும் நண்பர்கள் என்னைக் குறித்து வெட்கமடைந்தார்கள்! பகிரங்கமாய் புறக்கணித்தார்கள்! முழு உலகமும் என்னைப் புறக்கணித்தது என்பதே என் நிலையாய் இருந்தது. அதில், என் உறவினர்கள் அனைவரும் இருந்தனர்! இவள் எனக்கு விரோதி! என்றே அறிவித்தார்கள். நான் அடைந்த துன்பங்களில் பெரும்பகுதி அவர்களாகவே இருந்தார்கள்! என்னை நோக்கிப் பார்த்த அனைவருமே, கோபத்தோடும் வெறுப்போடும் பார்த்தார்கள்! கூறவேண்டுமென்றால், தாவீது கூறிய வசனமே என்னுடைய பங்கு: "கர்த்தாவே உம் நிமித்தமே நிந்தைகள் ஏற்றேன்! வெட்கம் என் முகத்தை மூடிக்கொண்டது! என் சகோதரர்களுக்கு நான் அந்நியன் ஆனேன்! என் தாயின் பிள்ளைகளுக்கு வேற்று மனுஷனாகிப்போனேன். மனுஷர்களுக்கு நிந்தையும், ஜனங்களால் புறக்கணிக்கட்டவளுமானேன்" என்ற தாவீதின் இந்த அனுபவமே எனக்கும் நிறைவேறியது.*

இவ்வாறாக, இந்த முழு உலகமும் என்மீது கோபமாயிருப்பதை கர்த்தர் காண்பித்தார். எனக்காக நிற்கும்படி ஒருவரும் துணியவில்லை! என்ற என் இழிநிலையை என் கண்ணாரக் காணும்படி செய்துவிட்டு, **விவரிக்க முடியாத அமைதியில் வாசம் செய்திடும்** அவருடைய நித்திய வார்த்தையே எனது பங்காயிருக்கும் என வாக்குரைத்தார்! ஏராளமான அவருடைய பிள்ளைகளை எனக்குத் தருவேன் என வாக்குரைத்தார்! அவருடைய பிள்ளைகள் அனைவரையும் சிலுவையின் பாதையில் நடத்திச் செல்லும் பொறுப்பையும் எனக்குத் தந்தருளினார்!

கர்த்தருடைய வாக்குகளால் புளகாங்கிதம் அடைந்த நான் "ஓ கர்த்தாவே, உம் பார்வைக்கு நலமான யாதொன்றைச் செய்திட உம்மிடம் என்னை தத்தம் செய்கிறேன்! என்னுடைய அனைத்து மேன்மையும், என் முழு ஆர்வத்தையும் உம்முடைய திவ்விய சித்தத்தின் மையத்தில் கொண்டு வந்து வைத்துவிட்டேன்!" இவ்வாறு என் மனதில் ஜெபித்து முடித்தவுடன், கர்த்தர் என்னைப் பார்த்து "உன் **அர்ப்பண ஜெப வாழ்க்கையை** சீரழிக்க, சாத்தான் வன்மம் கொண்டு எழுந்துள்ளான் என்பதை பார்" எனக் காட்டினார். ஆகிலும், இதுவரை நீ ஜெபித்த **ஜெபங்களின் மூலதனம்** 'ஜெயத்தையே' உனக்கு நிரூபித்து காண்பித்துள்ளது! உன் ஜெபங்கள் அனைத்தும், உனக்கு கைகொடுக்கும், பாதுகாக்கும்! எனவும் வாக்குரைத்தார்.

- மேடம் குயான்

## ஓ, அந்த சிலுவையின் காட்சி!

*அந்த மூன்றாணிகள், பிதா வழங்கிய அன்பின் கட்டு*

மூன்று சிலுவைகள் நிறுத்தப்பட்டன! கர்த்தராகிய இயேசு இரு கள்ளர் நடுவில் தொங்கினார். **நடுவிலிருப்பதே எக்காலத்திலும் அவருக்குரிய இடம்.** அநாதி மகிமையிலும், மாம்சத்தில் பாடுபடுகையிலும், மகிமையடைந்த பின்னும் **'நடுவே'** அவருடைய ஸ்தானம்! சகலமும் உண்டாவதற்கு முன்பே நடுவிலிருந்தவர் இவரே. ஆதியில் நமது இரட்சிப்பு ஆலோசிக்கப்பட்டபோது பிதாவும் ஆவியும், நடுவிலிருந்த குமாரனையே நோக்கிப் பார்த்தார்கள். உலகம் பாவத்தால் அந்தகாரப்பட்டபோது நடுவில் தோன்றிய ஒளி இவரே! முற்பிதாக்களுக்கு வாக்குப்பண்ணப்பட்டு, அவர்கள் நடுவில் மறைந்திருந்த சந்ததி இவரே! இஸ்ரவேலர் எகிப்தைவிட்டு புறப்பட்டது முதல், கானான் சேரும்வரை அவர்கள் நடுவிலிருந்த ஞானக்கன்மலை இவரே! அக்கினிச் சூளையில் போடப்பட்டவர்களின் நடுவில் காணப்பட்ட நாலாம் ஆள் இவரே!

அவர் மாம்சத்தில் வந்தபோது, இஸ்ரவேலின் ஆறுதல் வரக் காத்திருந்தவர்கள் ஆவலோடு சூழ்ந்து கொள்ள அவர்கள் நடுவிலிருந்த 'குழந்தை' இவரே! பன்னிருவயதில், போதகர் நடுவில் விளங்கின பிள்ளையாகிய இயேசு இவரே! திரள் ஜனங்கள் கூடிநிற்க அவர்களுக்கு உபதேசிக்கும்படி அவர்கள் நடுவிலிருந்த போதகர் இவரே! சகல நோயாளிகளும் வியாதியஸ்தரும் சூழ்ந்துகொண்டபோது நடுவிலிருந்த அற்புத மூர்த்தி இவரே! குற்றம் பிடிக்கும்படி நெருங்கி வந்த சத்துருக்கள் நடுவிலிருந்த சத்தியம் இவரே! கெத்சமனேயில் ஒருபக்கம் தூதரும் மறுபக்கம் சீஷருமிருக்க நடுவில் போராடினவர் இவரே! அன்னா காய்பாவிசாரணையில் நடுவில் நின்ற நாதன் இவரே! பிலாத்துவின் முன் திரள் ஜனங்கள் கூடி நிற்க, நடுவில் நின்ற கைதி இவரே! இப்பொழுது இரண்டு கள்ளர் நடுவில் தொங்குகிறவரும் இவரே!

> *தேவனுக்கும் மனுஷனுக்கும் நடுவிலுள்ள மத்தியஸ்தன் இவரே! அவர் உயிர்த்தபின் கலங்கியிருந்த சீஷர்களின் நடுவில் நின்று சமாதானம் கூறினவர் இவரே! பரத்துக்குப் போனபின் அங்கு அவர் இருக்கும் இடமும் நடுவே! தேவனுடைய பரதீசின் நடுவிலிருக்கிற ஜீவ விருட்சம் இவரே! ஏழு குத்துவிளக்குகளின் நடுவில் தோன்றினவர் இவரே! அவர் நாமத்தினாலே கூடும் இருவர் அல்லது மூவர் நடுவில் இருப்பவரும் இவரே! உலகத்தை நியாயந்தீர்க்க வரும்போது ஜாதிகளை இரண்டாகப்பிரித்து அவர்கள் நடுவில் நியாயாதிபதியாக விளங்கப்போகிறவரும்*

*இவரே! தேவனுடைய இன்ப ராஜ்ஜியத்தில், மீட்கப்பட்ட திரளான கூட்டத்தாரின் நடுவிலிருக்கும் நேச மீட்பர் இவரே!*

*இவ்வாறு சர்வத்துக்கும் நடுநாயகமாயிருப்பவரை இன்னாரென்று அறியாமல், அவரைச் சிலுவையிலறைந்தது போதாதென்று, சத்துருக்கள் அவரைத் தூஷிக்கவும் பரியாசம் பண்ணவும் துணிந்தார்கள். மற்றிரண்டு சிலுவைகளையும் மறந்து, இவர் ஒருவரையே எல்லோரும் நோக்கினார்கள். அது ஜனப் போக்குவரத்துள்ள பெரும் பாதையாயிருந்தபடியால், அவ்வழியாய் போனவர்கள், அவரைப் பார்த்து தங்கள் தலைகளைக் துலுக்கி, "தேவாலயத்தை இடித்து மூன்று நாளுக்குள்ளே கட்டுகிறவனே உன்னை நீயே இரட்சித்துக் கொள், நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கிவா!" என்றார்கள். அதிகாரிகளும் அவர்களோடு சேர்ந்து, "இவன் மற்றவர்களை இரட்சித்தான், தன்னைத்தான் இரட்சித்துக் கொள்ளத் திராணியில்லை. இவன் இஸ்ரவேலின் இராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கி வரட்டும், அப்பொழுது விசுவாசிப்போம், தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொல்லித் தேவன்மேல் நம்பிக்கையாயிருந்தானே! அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும்"என்று சபதம்போல் பேசினார்கள். அக்கூட்டத்தில் அவருக்குப் பிரியமானவர்கள் அப்படியாவது இறங்கிவிடமாட்டாராவென்று ஆசைப்பட்டிருப்பார்கள். இது, காரியம் அறியாதவர்களின் பேச்சும் பரியாசமுமாயிருந்தன!*

> "அவர் இறங்க வேண்டுமானால் ஒரு நிமிஷத்தில் அப்படிச் செய்யக் கூடும். சிலுவையின் ஆணிகளும் கட்டுகளும் ஒரு தடையல்ல. போர்ச் சேவகரின் பாதுகாப்பு ஒரு பொருட்டல்ல. ஆனால், சிலுவையோடு அவரை அறைந்திருந்த தெய்வ அன்பின் கட்டிலிருந்து அவர் எப்படி நீங்க முடியும்? அவர் தம்மை இரட்சித்துக் கொள்ளப்பார்த்தால் உலகம் இரட்சிக்கப்பட வழியேது?

*ஆகையால் அவர்கள் பேசின சபத வார்த்தைகள் அவருக்கு வனாந்தரத்தில் நேரிட்ட பிசாசின் சோதனை போலிருந்தது. நீ தேவ குமாரனா? நீ கிறிஸ்துவா? நீ தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவனா? நீ இஸ்ரவேலின் இராஜாவா? அப்படியானால் சிலுவையிலிருந்து இறங்கி வா, உடனே நாங்கள் விசுவாசிக்கிறோம் என்றார்கள். அவரோ "அப்பாலே போ சாத்தானே! நான் என்னை இரட்சிக்கக்கூடுமானால் உலகம் எப்படி இரட்சிக்கப்படக்கூடுமென்று மனதிலெண்ணினவராய்" பொறுமையோடே தொங்கினார்!*

*கொல்கொதாவின் கொடுமுடி நடத்தின நூற்றுக்கதிபதி ஆண்டவரை விட்டு விலகாமல், அவருக்கு எதிரே நின்று அவரைப் பார்த்துக்கொண்டேயிருந்தான்! தாம் இராஜாவென்றும், தேவ குமாரனென்றும், பிலாத்திடம் சொன்னதைக் கேட்டான்! யூதர்களுடைய மூர்க்கத்தையும் பிடிவாதத்தையும் கண்டான்! அவர் குற்றமற்றர் என்பதையும் அறிந்தான்! அவருடைய சாந்தத்தையும் பொறுமையையும் கவனித்தான்! அவர் திருமொழிகள் யாவற்றையும் கேட்டான்! சத்துருக்களுக்காக அவர் ஜெபித்ததும் கள்ளனுக்குப் பரதீசை வாக்குப்பண்ணினதும் அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது! இப்படிப்பட்ட ஆச்சரியமான குற்றவாளியை அவன் தன் ஜென்மத்திலும் கண்டதில்லை!*

இவர் மெய்யாகவே தேவ குமாரனாயிருப்பாரோ? இப்பாதக யூதர்கள் அநியாயமாய் இவரைச் சிலுவையிலறையச் செய்தார்களோவென தனக்குள்ளே சிந்தனை செய்து கொண்டிருக்கையில், அந்நேரம் நடந்த ஆச்சரியமான சம்பவங்கள் மூலமாய் தேவன் அவனோடு பேசினார். கன்மலைகள் பிளந்து நிற்க, கல்லிலும் கடினமான யூத அதிகாரிகள் கொக்கரித்து நின்ற நேரத்தில்...

**"புறஜாதியானான நூற்றுக்கதிபதி வாய்திறந்து: "இந்த மனுஷன் நீதிபரர், மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன்" என்று சொல்லி தேவனை மகிமைப்படுத்தினான்!**

அவனோடு கூடியிருந்த ரோமப் போர்ச்சேவகரும் மிகவும் பயந்து ஆம், அவர் சொன்னபடியே தேவ குமாரன்தான் என்றார்கள். இவ்வாறு அறிக்கைசெய்த நூற்றுக்கதிபதி, பக்தியான விசுவாசியாக மாறி, கிறிஸ்துவின் ஊழியக்காரனாகியிருப்பான் என்பதற்கு ஐயமில்லை! அன்பான சகோதர சகோதரி, உங்களைக் குறித்து என்ன?

*- பரமானந்தம் ஐயர்*

---

## கூடிவரும் சபையில் 'அவரது வல்லமை' அதிகம் உண்டு!

*தேவ பிரசன்னம் நிறைந்த சபை*

ஓர் விஞ்ஞான கணக்கை உபாகமம் *32:30*-ல் வாசிக்கிறோம்: "**ஒருவன்** ஆயிரம் பேரைத் துரத்தி, **இரண்டு பேர்** பதினாயிரம் பேரை துரத்தி ஓட்டுவார்கள்" என்ற வசனமேயாகும். இது எப்படி சாத்தியமாகும்? என நாம் அறிய முடியவில்லை. ஆயினும், இது வேதத்திலுள்ள சத்தியம் என்பதை நாம் அறிந்திருக்கிறோம்! நடைமுறையில் கூற வேண்டுமென்றால் "ஒருவன் ஆயிரம் பேரைத்

*துரத்தினால், இரண்டுபேர் இரண்டாயிரம் பேரைத் துரத்துவார்கள்" என்றே சம்பவிக்க வேண்டும்! ஆனால், தேவனோ, இரண்டுபேர் பதினாயிரம் பேரைத் துரத்துவார்கள்! என, எட்டாயிரம் பேரை சேர்த்துக்கொண்டது எப்படி? இந்த மிகுதி "நாம் ஒன்றாய் கூடிவரும் சபைக் கூட்டத்திற்கு மாத்திரமே" இருக்கிறது! ஆகவே நாம் தனிப்பட்ட விதத்தில் கிருபையைப் பெற்று வாழ்வதில் திருப்தியடையாமல், 'சேர்ந்து கண்டடையும் கிருபையின் மிகுதியை' ஆதாயம் செய்வதற்கே வாஞ்சிப்போமாக!*

*தன் விசேஷித்த 'பிரசன்னத்தை' நமது ஆண்டவர் மத்தேயு 18-ம் அதிகாரத்திலும், மத்தேயு 28-ம் அதிகாரத்திலும் வாக்குரைத்திருக்கிறார்! "இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடி இருக்கிறார்களோ, அங்கே* **அவர்கள் நடுவில் இருக்கிறேன்**" *என முதலாவது வாக்குதத்தமாக இயேசு கூறினார் (மத்.18:20). இரண்டாவதாக "நீங்கள் புறப்பட்டுப் போங்கள்.... இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும்* **நான் உங்களுடனே கூட இருக்கிறேன்**" *என்றார் (மத்.28:20). 'அவர்கள் நடுவிலிருப்பேன்' என்ற ஆசீர்வாதம், அவருடைய நாமத்தில் கூடி வருவதை முன்னிட்டு அறிவிக்கப்பட்டதாகும்.*

*இன்று அனேகர் அவரது சமூகத்தை அல்லது அவரது பிரசன்னத்தை தனிப்பட்ட தங்கள் ஜீவியத்தில் மாத்திரமே அனுபவித்திருக்கிறார்கள். அவ்வித அனுபவமாகிய 'அவரது பிரசன்னம்' நமக்குப் போதுமானதாய் எண்ணாதிருப்போமாக!*

> **"கர்த்தருடைய வலிமையான பொங்கி வழியும் அவரது பிரசன்னம் நாம் ஒன்றாய் கூடிவரும்போது மாத்திரமே அனுபவித்திட முடியும்! அதாவது நீங்கள் தனிப்பட்ட ஜீவியத்தில் அனுபவித்து வாழும் அவரது பிரசன்னம் 'குறைந்த அளவாகவே' காணப்படுகிறது! நீங்கள் சகோதர சகோதரிகளோடு சேர்ந்து கூடிவரும்போது அனுபவிக்கும் அவரது பிரசன்னம், ஒப்பிட முடியாத அளவு அதிகமாயிருக்கிறது!**

*ஆகவே, நீங்கள் ஒன்றாய் கூடிவரும்போது பெற்றிடும் அபரிதமான அவரது பிரசன்னத்தை 'கற்றுக்கொள்ள' ஆரம்பியுங்கள்! இந்த அளவில்லா கிருபையை, வேறுவிதமாய் நீங்கள் பெற்றுக்கொள்ள இயலாது!*

*எனவே, தேவனுடைய பிள்ளைகள் ஒன்றாய் சபைகூடி வருவது எவ்வளவு ஆசீர்வாதமாயும் ஆச்சரியமாயும் இருப்பதைப் பாருங்கள்! கர்த்தருடைய சரீரமான சபை எவ்வாறு இயங்குகிறது என்பதை நாம்*

*காண இயலாது! ஆனால் கர்த்தர் சபையின் மூலமாய் பணியாற்றும் அவரது கிரியைகளை நாம் கண்டு அறிந்திருக்கிறோம்: ஒரு சகோதரன் எழுந்துவந்து பேசும்போது 'வெளிச்சத்தை' நாம் காண்கிறோம்! ஒரு சகோதரன் வாய்திறந்து ஜெபிக்கும்போது,* ***நம்மால் தேவனைத் தொட முடிகிறது!*** *மற்றவர்கள் எழுந்து சாட்சி கூறும்போது 'ஜீவன் பகிர்ந்தளிக்கப்பட்டதை' பெற்று அனுபவிக்கிறோம்! இவ்வாறு தொடர்ந்து விவரிக்க இயலாத வகையில், கிறிஸ்துவின் சரீரம் வல்லமையாய் செயல்படுகிறது!*

*நாம் கர்த்தருடைய வருகையில் நிற்கும் நாளிலே இவை அனைத்தையும் இன்னும் அதிகமாய் விளங்கிக்கொள்வோம்! இன்றோ, கர்த்தர் அருளும் ஈவை முழுமையாய் பெற்று அவரைப் பின்பற்றுவதே நமது பங்காயிருக்கிறது!*

*- வாட்ச்மென் நீ*

---

## நம் குருநாதர் சகித்த நிந்தனைகள்!

*'அவரளித்த பாடுகளின் பங்கு' நமது பாக்கியம்*

*இயேசுவின் மீது சொல்லப்பட்ட அவதூறான, அவமரியாதை யான வார்த்தைகள் கொஞ்சநஞ்சமல்ல!* **அவரது கன்னிப் பிறப்பு** *மறைமுகமாய் தாக்கப்பட்டது. இயேசுவை இழிவுபடுத்த "ஆபிரகாம் எங்கள் தந்தை" என மார்தட்டிய யூதரைப் பார்த்து இயேசு சொன்னார், "நீங்கள் ஆபிரகாமின் மக்கள் என்றால், அவரைப் போலவே செயல்படுவீர்கள். நீங்களோ என்னைக் கொல்ல முயலுகிறீர்கள். ஆபிரகாம் இப்படிச் செய்யவில்லையே" (யோவான் 8:39,40) என்றார். பிசாசைக் குறிப்பிட்டு அவர், "நீங்களோ, உங்கள் தந்தையைப்போல் செயல்படுகிறீர்கள்" என்றார். உடனே அவர்கள் அவரைத் திருப்பிக் கேட்ட வார்த்தைகளைப் பாருங்கள்: "***நாங்கள் வேசித்தனத்தில் பிறந்தவர்கள் அல்ல;*** *எங்களுக்கு ஒரே தந்தை உண்டு; கடவுளே அவர்" (வச.41). இயேசு எவ்விதம் கன்னி வயிற்றில் பிறந்தார்? என்ற கேலிப்பேச்சு, பல ஆண்டுகள் அப்பிராந்தியத்தில் பரசலாக இருந்திருப்பதையே, அவர்களின் பரிகாசம் வெளிப்படுத்துகிறது!*

*ஆபிரகாமின் தெய்வ குணம் அவர்களிடமில்லையென்று அவர் சொன்னதால், "அவர் ஓர் யூதரே அல்ல, ஒரு சமாரியன்" என்றனர்! இப்படிச் சொல்லி, அவர் யூத முறைமையின்படி நடக்கவில்லை என்றும் குற்றம் சாட்டினார்கள். உங்கள் பிதாவாகிய பிசாசின் குணங்களே உங்களிடமிருக்கின்றன என்று இயேசு சொன்னதால்,* **அவருக்குத்தான் பிசாசு பிடித்திருக்கிறது** *என்று பதில் கொடுத்தார்கள்!*

*"அவர் மதிமயங்கியிருக்கிறார்" என்று இயேசுவைக் குறித்து அவரது உறவினரே சொன்னார்கள் (மாற்கு 3:21). அதைத் தொடர்ந்த எருசலேமின் வேதபாரகர் "இவனைப் பெயல்செபூல் பிடித்திருக்கிறது; பேய்களின் தலைவனைக் கொண்டே இவன் பேய்களை ஓட்டுகிறான்" (வச.22).* **சாதாரணப் பேய் அல்ல, தலைமைப் பேய்தான்** *அவரைப் பிடித்திருக்கிறது என்றனர்! இயேசுவைக் குறித்து மிக சாதாரணமாக, எவ்வளவு கேவலமாய் பேச முடியுமோ, அவ்வளவு துணிகரமாய் பேசினார்கள்!*

*அவர்களின் நிந்தனைச் சொற்களை இயேசு கோடிட்டு, "குருவை விடச் சீடர் பெரியவரல்ல; பணியாளரும் தம் தலைவரைவிடப் பெரியவர் அல்ல.... வீட்டுத் தலைவரையே பெயல்செபூல் என அழைப்பவர்கள், வீட்டாரைப் பற்றி இன்னும் தரக்குறைவாய் பேச மாட்டார்களா?" (மத்.10:24,25) என்றார்.*

> **"மக்களால் இயேசு நடத்தப்பட்டதைவிட அவரது உத்தம சீஷர்களோ அல்லது உத்தம ஊழியர்களோ, தாங்கள் கண்ணியமாக நடத்தப்பட எதிர்பார்க்கக் கூடாது! சிலுவையில் இயேசு தொங்கும்போது, மக்களது பரிகாசமும் நிந்தனையும் உச்சத்தை எட்டின. அவரது முழு ஊழியமும் கேள்வி கேட்கப்பட்டது!**

*"சிலர் அவர்மீது துப்பவும், அவர் முகத்தை மூடி அவரைக் கையால் குத்தி, 'தீர்க்கதரிசியே, யார் எனச் சொல்?' என்றனர்" (மாற்கு.14:65). அவரது தலைமையை துச்சப்படுத்தி சவாலிட்டு, "அவருக்கு செந்நிற ஆடையை உடுத்தி, ஒரு முள்முடி பின்னி அவருக்குச் சூட்டி, 'யூதரின் அரசே, வாழ்க!' என்று அவரை பரிகாசத்துடன் வாழ்த்தி மகிழ்ந்தனர்" (15:17,18).* **அவரது முழு ஊழியமும் பழிக்கப்பட்டது!** *வேதபாரகர்கள், பிரதான ஆசாரியர்களுடன் சேர்ந்து, அவரை ஏளனம் செய்து, 'பிறரை விடுவித்தான், தன்னையோ விடுவிக்க முடியவில்லை' என்று பேசிக்கொண்டனர்! (வச.31).*

*பரிகசித்து, மெய் தொண்டர்களின் ஜீவியமும் ஊழியமும் நிந்தனைக்கு உட்படுத்தப்படுவது, குருவுக்கு நேரிட்டவைகளேயாகும்! தாங்கள் மாத்திரமல்ல, தங்கள் குடும்பங்களும், ஊழியங்களும் பரிகசிக்கப்பட்டு துன்பத்தின் பாதை கடந்து சொல்வோர், 'இயேசுவின் அடிச்சுவட்டில் நிற்கும்' உத்தம சீஷர்கள்! உத்தம ஊழியர்கள்! நமக்கு முன் சென்ற துணிவு மிகுந்த நம் குருவிற்கே, சகல துதி ஸ்தோத்திரங்கள் உண்டாவதாக!*

*- R.ஸ்டான்லி BYM*

## சிலுவை கற்பிக்கும் 'மரணமே' நமது ஜீவன்!

*எது சுமை? என அறிந்தவன் சிலுவை ஏற்பான்*

*"**சு**யம்" என்பதை, உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனும் சுமந்து கொண்டிருக்கும் "**சுமை**" என அறிந்தவன் மாத்திரமே 'சிலுவை வழியை' போற்றுவான்! சுவிசேஷத்தில், ஒட்டகம் என இயேசு பொருள்படுத்தியது, சுமை சுமக்கும் ஒட்டகமேயாகும்! வனாந்திர நீண்ட பயணத்தில் பயணிக்கும் ஒட்டகம், "தன் சுமையை இறக்கிட" ஆசையாய் இருக்கும்! "ஒட்டகமே, உன் சுமையிலிருந்து சம்பூர்ண விடுதலை பெற்றிட, இடுக்கமான இந்த வழி சென்று சுதந்திரம் அடைவாயாக!" என ஒட்டகத்திற்கு இயேசு கூறுவதைப் போன்ற நற்செய்தியைப் பாருங்கள்! அவ்வளவுதான், அந்த ஒட்டகம் பேரானந்தம் கொண்டு "எஜமானே, சுமை இறக்க சுவிசேஷம் தந்தவரே! என் முதுகில் டன் டன்னாய் ஏறியிருக்கும் சுமையை மடமடவென்று இறக்கிவிடப் போகிறேன்! இதோ, நான் இப்போது 'இடுக்கமான வழியென்ன....' **ஊசிமுனை வழியாகக்கூட** கடந்து "விடுதலை ஜீவியம் பெறுவேன்" எனக்கூறி ஆனந்திக்கும்! (மாற்கு 10:25).*

*'உலகத்தின் பாவத்தை' கொல்கொதா மேட்டில் இயேசு சுமந்த பாரச் சிலுவையையா நீங்கள் சுமந்திட இயேசு கூறினார்? அது, பாருலக இரட்சிப்பிற்கு அவர் சுமந்த சிலுவை! அதை, அல்ல! மாறாக "அவனவன் சிலுவையென" நம் சொந்த சிலுவையை சுமப்பதில்தான் நாம் இரட்சிக்கப்படுகிறோம்!*

> **"சுய கௌரவம், சுய மரியாதை, என தொடரும் எத்தனையோ சுயத்தை காணும்போது "அந்த சுயத்தை அல்லது நமக்குள் கிடக்கும் கொடிய சுமையை" மனதார வெறுத்து, அதை ஒழித்திட இயேசு தந்த வழிதான் "அவனவன் தன்தன் சிலுவை எடுத்து" என்ற ஒப்பற்ற வழி!**

*ஆகவேதான், தீய சூழ்நிலைகளில் வெளிப்படும் அந்த கொடிய சுயத்தின் சுமையை வேகவேகமாக சிலுவையில் இறக்கி..... அச்சிலுவையில் சுயம் மரித்திட ஒப்புக்கொடுப்போமாக!*

*"உன்னைக் கள்ளனென்று கூறிவிடுவேன்" என்ற ஆங்காரம் ஒலிக்கும்போது, நம் சுயம் துடிதுடித்துப் போகிறதே! இயேசுவோ, "கள்ளர் மத்தியில் ஒரு கள்வராக எண்ணப்பட்ட" விபரீதத்தை சிலுவையில் சகித்தாரே! இவ்வாறாகவே, நாம் சுமையாய் சுமந்த சுய - கௌரவம், சுய - மரியாதை சின்னாபின்னமாய் சிலுவையில் அறையப் பட்டு, நாளுக்கு நாள் 'சுமை' குறைவதுதான் ஒப்பற்ற சுவிசேஷம்!*

*- T.ரத்தினகுமார்*

## வேதத்தை, அல்கான்குயிங் மொழியில் மொழிபெயர்த்த போதகர்,

# ஜான் இலியட்



இங்கிலாந்து தேசத்தில் பிறந்த ஜான் இலியட், மிகுந்த கஷ்டத்தில் தன் படிப்பை 1622-ம் ஆண்டு தன் 18-ம் வயதில் முடித்தார். வேதாகமத்தில் ஆர்வம் கொண்டு இயேசுவின் தொண்டனாய் மாறி, வேதாகம பள்ளியில் படித்தார். படிப்பின் முடிவில், ஆங்கிலிக்கன் சபையின் போதகராய் நியமனம் செய்யப்பட்டார். அச்சமயத்தில், அமெரிக்க தேசத்திலுள்ள அல்கான்குயிங் என்ற இன மக்களுக்கு இயேசுவை அறிவிக்கவும், அவர்களுக்கு வேதாகமம் இல்லை என்று அறிந்து, அவர்கள் மொழியில் வேதப்புத்தகத்தை மொழிபெயர்க்கவும் பாரங்கொண்டார்.

அந்த அல்கான்குயிங் இன மக்கள் "கிறிஸ்துவை அறியாத இந்தியர்கள்" என்றே அழைக்கப்பட்டனர். அவர்களுடைய மொழியை வேறு எந்த ஏதுகரமும் இல்லாமல், அல்கான்குயிங் நண்பர் மூலமாய் இரவு பகலாய் பிரயாசப்பட்டு, தானே அவர்கள் மொழிக்குரிய வார்த்தைகளையும், இலக்கணங்களையும் கற்று, முதலாவதாக புதிய ஏற்பாட்டை மொழிபெயர்த்து பிரசுரம் செய்தார். அந்த மக்களுக்கு ஏற்பட்ட 'நில பிரச்சனையை' தானே வழக்கு மன்றத்திற்கு ஏறி நிலங்களை மீட்டு தந்தார். பின்பு, அல்கான்குயிங் மொழியிலேயே மிகுந்த கஷ்டத்தோடு பிரசங்கம் செய்தார்.

அந்த ஜனங்கள் மிகுந்த ஆர்வத்தோடு கேட்டதும் அல்லாமல், பல கேள்விகளை அவரிடத்தில் வினவினார்கள். சுமார் 1-மணி நேரத்திற்கு மேலாக பதில் தந்த ஜான் இலியட்டிடம் "இதற்கு முன் வந்த கிறிஸ்தவ பணியாளர்கள், உங்களைப்போல் இயேசுவின் சுவிசேஷத்தை எங்களுக்குத் தரவில்லை" என வருந்தினார்கள். அவர் ஊழியம் செய்த இந்த மக்கள் மனந்திரும்பி, நல்ல சீஷர்களாய் உருமாற்றம் அடைந்தார்கள். 1663-ம் ஆண்டு அல்கான்குயிங் மொழியில் முழு வேதாகமத்தையும் மொழிபெயர்த்து, அதை பிரசுரம் செய்து, அந்த 'இந்தியர்களை' மகிழச் செய்தார். ராக்ஸ் பர்ரி சபையின் 'இந்தியர்களோடு' 58 ஆண்டுகள் நிறைவான ஊழியம் செய்தார். முடிவில், தன்னுடைய 85-ம் வயதில், தன் கர்த்தரிடம் திரும்பினார். பல ஆயிரம் மக்களை கிறிஸ்துவுக்குள் வழிநடத்திய இவரை "கிறிஸ்துவின் அன்பையும், அவரது கண்டிப்பையும்" இணைத்து போதித்து உத்தம சபையை உருவாக்கியவர் என பெயர் பெற்றார்!

– நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்

## ஓ வாலிபனே, "நீ பயனுள்ளவனாய் மாற" கிறிஸ்துவிடம் வா!

"தேவன் தமது பிள்ளைகளின் வாழ்வில் துன்பங்களை ஏன் அனுமதிக்க வேண்டும்?" என்றதோர் கேள்வியை அவிசுவாசியானதோர் மனிதன், தேவ பக்தியாய் ஜீவித்ததோர் கிறிஸ்தவக் கொல்லனிடம் சவாலாக முன் வைத்தான். இன்றும், எண்ணற்ற மாந்தர்களின் கேள்வியும் இவ்வாறாகவே இருக்கிறது!

அந்த அவிசுவாசிக்கு, அக்கிறிஸ்தவக் கொல்லன் கீழ்கண்டவாறு மாறுத்தரம் அளித்தார்:

"நான் ஒரு சிறிய துண்டு இரும்பை எடுத்து அதனை அக்கினியில் வைத்துப் பழுக்கக் காய்ச்சி எடுத்து, பட்டறைக் கல்லில் வைத்துப் பதமாக்கி, நன்கு அடிக்கின்றேன்! பின்னர், அதனைத் தண்ணீரில் போட்டு வெப்ப நிலையை மாற்றி மீண்டும் நெருப்பில் போட்டுப் பழுக்கக் காய்ச்சி எடுத்து, நன்கு அடித்து மிகவும் பயனுள்ளதோர் பொருளை அதிலிருந்து உருவாக்குகின்றேன்".

அதுமாத்திரமல்ல "பழுக்கக் காய்ச்சிப் பட்டறைக் கல்லில் வைத்து நான் முதன்முறை அடிக்கும்போது, அது பக்குவமாகக் காணப்படா விட்டால், நான் உடனே அதை உலோகக் கழிவுத்தொட்டியில் வீசி எறிந்து விடுகின்றேன்" என்ற உண்மையையும் எடுத்துரைத்தார்!

கேள் வாலிபனே, "நான் பக்குவமடைகின்றேனா? என்பதனைப் பரிசோதிக்கவே தேவன் என்னைப் புடமிடுகின்றார் என்றே நான் விசுவாசிக்கின்றேன்! என் முழு இருதயத்தோடும், என் பாடுகளை நான் மிகவும் பொறுமையுடன் சகிக்கின்றேன்!" என கெம்பீரமாய் கூறினார்!

மேலும், நான் நாள்தோறும் ஆண்டவரை நோக்கி "ஆண்டவரே, உலைக்கல அக்கினி எனக்கு அவசியம் என்று நீர் கருதும் பட்சத்தில், அக்கினியில் வைத்து என்னைக் காய்ச்சும்! நீர் என்னை எதுவேண்டுமானாலும் செய்யும்! ஆனால், ஓ என் அன்புள்ள ஆண்டவரே, எந்நிலையிலும் என்னைக் கழிவுத்தொட்டியில் மாத்திரம் ஒன்றுக்கும் பயன்படாது என்று வீசி எறிந்து போடாதேயும்" என்று ஜெபிக்கின்றேன் என்று அக்கொல்லன் கூறினான்! அந்த உண்மையுள்ள கொல்லனின் பதில், அந்த வாலிபனை, அன்றே மனந்திரும்பச் செய்தது!

- சுவிசேஷ மலர்

பணம் அனுப்ப QR பயன்படுத்தவும்

maduraichristianfellowship@indianbk

பரலோக பொக்கிஷங்கள்

**Published and Owned by:**
**Madurai Christian Fellowship, Regd Society,**
***Editor* T.Rathnakumar, Madurai.**
**Printed by SFA Print (P) Ltd., Sivakasi.**